Tamilische Übersetzung des Merkblattes „In der Klasse Ihres Kindes hat es Kopfläuse?“ / Ausgabe 2012

# தகவல்பிரசுரம் „உங்கள் பிள்ளையின் வகுப்பில் தலைப்பேன் உள்ளதா?“

**முக்கியமானவை சுருக்கமாக**

- யாருக்கும் தலைப்பேன் வரலாம் – நாம் இணைந்து அவற்றைத் தொலைப்போம்
- விரைவில் கையாளுவது பாடசாலை சுற்றுவட்டத்தில் தொற்றுவதை தடுக்கும்
- **பேன் தொற்றை கண்டுபிடிப்பதும், சிகிச்சையும் பெற்றோரின் பொறுப்பு**
  - ➢ உங்கள் பிள்ளையையும், ஏனைய குடும்ப அங்கத்தினரையும் இன்றே பரிசோதியுங்கள் (கீழே பார்க்க)
  - ➢ தலைப்பேனை நீங்கள் கண்டால், பின்பக்கத்தில் உள்ள அறிவுறுத்தலின்படி உடனே சிசிச்சையை மேற்கொள்ளுங்கள்
- தலையில் உயிருடன் பேன்கள் உள்ள பிள்ளைகள், தலைப்பேன் மருந்துடன் வெற்றிகரமாக சிசிசையை மேற்கொண்ட பின்னரே மீண்டும் பாடசாலைக்கு செல்ல முடியும்.

**தலைப்பேனின் தோற்றமும், வாழ்க்கைக்காலமும்**




- முட்டைகள் („ஈர்“, செத்து இருந்தால் சாவீர்) தலைமயிரில் ஒட்டிப்பிடித்திருக்கும். அவை சொடுகு போல இருக்கும், ஆனால் அகற்ற முடியாதிருக்கும்.
- தலைப்பேன்கள் தலைமயிரின் நிறத்தை ஒத்திருக்கும் அத்துடன் வெளிச்சத்திற்கு தப்பி ஓடும். கவனமாகப் பார்க்கும் போது காய்ந்த தலைமயிரில் பேன்களை கண்ணால் பார்க்க முடியும். (ஈரமான தலைமயிரில் பரிசோதிப்பதற்கு கீழே பார்க்க).

**தலைபேன், ஈர் மற்றும் சாவீர் ஆகியவற்றை கண்டுபிடிக்க சரியான நடைமுறை**

1. தலையை ஈரமாக்குங்கள்.
2. கொண்டிசன் எனப்படும் திரவத்தை ஈரமான தலைமயிரில் பரவலாக தாராளமாகப் பூசுங்கள்.
3. குழப்பிய தலைமயிரை நன்றாக வாருங்கள் (தூரிகை/சீப்பு)
4. தலைமயிரை பிரித்துப் பிரித்து பேன்சீப்பால் தலைமயிரின் அடியில் இருந்து நுனி வரை வாருங்கள்.




படம்: ஈரமான தலைமயிரை பேன்சீப்பால் தலைமயிரின் அடியில் இருந்து நுனி வரை வாருவது

5. தலையை வரிய பின்னர் பேன்சீப்பை ஒரு வெள்ளைக் கடதாசியில் (உதாரணமாகச் சமையல் கடதாசியில் ) தட்டி பேன் மற்றும் ஈர் உள்ளதா என பாருங்கள்
6. தலைமயிரை நன்றாக கழுவுங்கள்.

**தேவைகளுக்கு ஏற்ப தலைவாரும் மற்றும் சிகிச்சைக்குரிய திட்டம்**
அனுபவவிதி: 4 கிழமைகளில் 7 தரம் **தலைவருவது**! தலைப்பேன்கள் உயிருடன் காணப்பட்டால் மட்டுமே பேன்மருந்தை உபயோகிக்கவும்.

Hedrin, K.Laus மற்றும் Paranix ஆகிய மருந்துகள் விசேட சக்திவாய்ந்தவை. இம்மருந்துகளையும், பேன் சீப்பையும் மருந்துக்கடைகளில் பெற்றுக்கொள்ளலாம். கர்ப்பகாலத்தில், பாலுட்டும் நேரம் மற்றும் சிறு பிள்ளைகளுக்கு: மருந்துடன் உள்ள தகவற்துண்டை கவனிக்கவும்.
மேலதிக தகவல்களுக்கு www.gef.be.ch; www.lausinfo.ch.

## தலைவாரும் மற்றும் சிகிச்சைக்குரிய அட்டவணை

**1.நாள்** **சரிபார்த்தல்: *சீப்புடன்* (1ம் பக்கத்தைப் பார்க்கவும்)**
- அ: தலைப்பேன் இருந்தால் பேன்மருந்தை (உதாரணம்: Hedrin, K.Laus மற்றும் Paranix) உபயோகிப்பதுடன், தலையை வாரவும்.
- ஆ: ஈர் அல்லது சாவீர் மட்டும் இருந்தால், தலைவாரி அகற்றவும் (பேன்மருந்து இல்லாமல்).
- இ: தலைப்பேனோ அல்லது ஈர் மற்றும் சாவீர் காணப்படாவிட்டால், உடனடி நடவடிக்கை தேவையில்லை (ஆனபோதும் 7நாட்களின் பின் தலைவாரிப் பார்க்கவேண்டும்!).

**3.நாள்** அ+ஆ: மீதமுள்ள தலைப்பேனுடன் ஈர், சாவீர் அல்லது ஈர் மற்றும் சாவீர் ஆகியவற்றை தலைவாரி அகற்றவும்.(*சீப்பால்* பரிசோதிப்பது)

**7.நாள்**
- அ: இரண்டாம்தரம் பேன்மருந்தை பாவிப்பதுடன், தலைப்பேன் மற்றும் ஈர் ஆகியவறை தலைவாரி அகற்றவும்.
- ஆ: மீதமுள்ள ஈர் அல்லது புதிய ஈர் மற்றும் சாவீர் ஆகியவற்றை தலைவாரி அகற்றவும்.
- இ: *சீப்பால்* பரிசோதிப்பது

**10.நாள்** அ+ஆ: *சீப்பால்* பரிசோதிப்பது

**14. நாள்**
- இன்னும் தலைப்பேன் (அல்லது புதிதாக) காணப்பட்டால்: அட்டவணையின் 1ம் நாளில் அ வில் தொடங்கவும் „பேன்மருந்தை உபயோகிப்பதுடன் தலைவாரி அகற்றவும்„.
- தலைப்பேனோ அல்லது ஈர் மற்றும் சாவீர் காணப்படாவிட்டால், சிசிசையை நிறைவு செய்யவும்.

**21. நாள்** புதிய தொற்றுக்கு சத்தியம் உள்ளதால் தொடரும் 2 கிழமைகளுக்கு *சீப்பால்* பரிசோதிப்பததை செய்யவேண்டும் (1xகிழமைக்கு).

**28. நாள்**

இரண்டு கிழமைகள் **Hedrin** பாவித்த பின்னரும் தொடர்ந்து உயிருடன் தலைபேன் காணப்பட்டால், கீழ் குறிப்பிட்டுள்ள துறைசார் வல்லுனர்களுக்கு அறிவிக்கவும். அவர்கள் உங்களுக்கு ஆலோசனையளிப்பார்கள்!

**முக்கியமனவை**
- பேன் தொற்றியுள்ளதை மேலும் தொற்றாது தடுக்க உடனடியாக சுற்று வட்டாரத்திற்கு தெரிவிக்கவும்: பாடசாலை, பிள்ளைகள் பராமரிக்கும் இடம், சிநேகிதர்கள் போன்றவை.
- கிழமையில் 1 தரம் குடும்ப **உறுப்பினர்கள் அனைவரும்** பேன்சீப்பால் பேனை பரிசோதிக்கவும்.
- சீப்புகள், துரிகைகள், தலைமயிருக்கு பாவிக்கும் கிளிப்புகள் போன்றவற்றை10 நிமிடங்கள் சூடான (60° C) சவர்க்கார நீரில் போடவும்.
- நீளமான தலைமயிரை ஒன்றாகக்கட்டவும்(தலைமயிருடன் தலைமயிர் நேரடியாக தொடாமல் இருப்பதற்கு).
- மேலதிக நடவடிக்கைகள் தேவையில்லை, தலையில் கவனம் செலுத்துங்கள்!
- நல்ல தடுப்புமுறை: பிள்ளைகளின் தலையை கிழமைக்கு 1 தரம் கொண்டிசன் எனப்படும் திரவத்தை ஈரமான தலைமயிரிலிட்டு, பேன்சீப்பால் வாரி முறகூட்டியே பரிசோதிக்கவும்.

கேள்விகள் இருந்தால் உங்களுக்கு பதிலளிக்க:

freienbach